# திருக்கச்சிநம்பி வைபவம்

தேவராஜத₃யாபாத்ரம் ஸ்ரீகாஞ்சீபூர்ணமுத்தமம்।
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தே₃ஹம் ஸஜ்ஜநாஶ்ரயம்॥

(ஸ்ரீவரதராஜனின் கருணைக்கு இருப்பிடமாய், மிகச்சிறந்தவராய், ராமாநுஜமுனிக்கும் மதிக்கத்தக்கவராய், நல்லோர்கள் சென்று சேருமிடமான திருக்கச்சிநம்பியை வணங்குகிறேன்.)

மயிலைக்கு மேற்கேயும், காஞ்சிக்குக் கிழக்கேயும்உள்ள பூவிருந்தவல்லியில் வீரராகவருக்கும், கமலைக்கும் நான்காவது குமாரராய் ஸௌம்ய வருஷம் (கிபி1009) மாசி மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் ''கஜேந்த்ரதாஸர்'' என்னும் திருநாமம் உள்ள திருக்கச்சிநம்பி அவதரித்தார். தாம் கைங்கர்யம் செய்துவந்த பார்க்கவரான திருமழிசையாழ்வாருடைய அருளாலே பிறந்தமையாலே, தந்தையார் இவருக்கு பார்க்கவப்ரியர் என்றும் பெயரிட்டார். திருக்கச்சிநம்பிகள் ஆளவந்தாருடைய ஶிஷ்யராவார். அவரளித்த திருநாமம் 'பேரருளாள தாஸர்' என்பது. கச்சியில் வாழ்ந்தமையால் திருக்கச்சிநம்பி, காஞ்சீமுனி, காஞ்சீபூர்ணர் என்றும் அழைக்கப்பட்டார். இவர் காஞ்சி வரதராஜப்பெருமாளுக்குத் திருவாலவட்ட கைங்கர்யம் செய்துகொண்டிருந்தவர். அப்பெருமாள் அர்ச்சாஸமாதியைக் கடந்து இவரோடு வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தார் என்பது ப்ரஸித்தம். அந்திமகாலத்தில் மோக்ஷம் விரும்பிய நம்பிக்கு ''நீர் விசிறி வீசினீர்; நான் பேசினேன். இரண்டுக்கும் சரியாயிற்று; ஓர் பரமபாகவதரின் அபிமானத்தைப் பெற்றாலே உமக்கு மோக்ஷம்'' என்று வரதன் கூறிவிட்டார்; அதற்குப் பின் மாறுவேஷத்துடன் திருக்கோட்டியூர்நம்பியிடம் மாடுமேய்க்கும் கைங்கர்யம் செய்து, ''நம்பையல்'' என்று அவரால் அபிமானிக்கப்பெற்று, அவ்வபிமானமே காரணமாக வரதனிடம் மோக்ஷம்பெற்றார் திருக்கச்சிநம்பிகள் — என்று வரலாறு கூறுகிறது. ஸ்ரீராமாநுஜர் இவரிடம் ஶிஷ்யராக ஆஶ்ரயிக்க ஆசைப்பட்டார். நம்பி மறுத்துவிட்டார். இவர் உண்ட கலத்திலே உண்ணவேணும் என்று ஆசைப்பட்டார் ராமாநுஜர். அதை ஸ்ரீராமாநுஜருடைய பார்யை நிறைவேறாமல் செய்துவிட்டாள். தேவப்பெருமாளிடமிருந்து ஸ்ரீராமாநுஜருக்கு ஆறு வார்த்தைகளைப் பெற்றுக்கொடுத்து தர்ஶநார்த்தங்களை உறுதிப்படுத்திய மஹாநுபாவர் இவரே. தேவப்பெருமாளைப் பற்றிய எட்டு ஶ்லோகங்கள் கொண்ட ''தேவராஜாஷ்டகம்'' என்னும் துதிநூல் இவர் அருளிச்செய்தது.

—ஸுத₃ர்ஶநர் ஸ்ரீ.உ.வே.க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார்ஸ்வாமி